சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 14/2024

பெயர். திரு. சங்கர் நாள் 25.06.2025
த/பெ.

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. மனுதாரர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு விவரங்களை மனுதாரர் வழக்கறிஞர் என்னிடம் கூறினார். இருசக்க்ர வாகனத்தை விஸ்வநாதன் ஓட்டிச் சென்றார். வேறு வண்டி ஏதும் அவர் வண்டியை இடிக்கவில்லை. விபத்து நடந்த இடத்தில் மாடுகள் அங்கும், இங்கும் ஓடின. நான் சென்று பார்த்தபொழுது விஸ்வநாதனும், பரிமளாவும் கீழே விழுந்து கிடந்தனர். வண்டி மாட்டின் மீது மோதியதா, மாடு வண்டியின் மீது மோதியதா என்று நான் பார்க்கவில்லை. விபத்து சம்மந்தமாக படாளம் போலிசார் என்னை விசாரித்தனர். நான் காவல் நிலையம் சென்று வாக்குமூலம் அளித்துள்ளேன். அதன் நகலை எடுத்துப் பார்த்தால் நான் அவ்வாறு வாக்குமூலம் அளித்தேனா இல்லையா என்பது தெரியும் என்றால் சரியல்ல. பரிமளாவிற்கு தலையில் அடிப்பட்டது. அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் பரிமளா மருததுவமனையில் வைதது இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். விபத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றாலும், மனுதாரருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.